بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஜமாஅத்தில் அத்தகைய மக்கள் அதிகமாக இருக்க வேண்டும். ஆன்மீக உணர்வை அதிகமாக ஏற்கத்தக்க புலனுடையவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். பிறகு உலகிற்கு உண்மையான தொழுகை என்றால் என்ன? உண்மையான வணக்கம் என்றால் என்ன? அதற்காக எத்தகைய உணர்வை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது? என்று உலகிற்கு தெரிவிப்பவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 29.01.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: அல்லாஹ் மறைவானவன்; ஆனால் அவனது வல்லமைகளைக் கொண்டு அவன் அறியப்படுகிறான். துஆவின் மூலமாக அவனது இருப்பு தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மன்னர் அல்லது சக்கரவர்த்தி என்று அழைக்கப்படுபவராயினும் சரி ஒவ்வொருவரின் மீதும் அவனை முற்றிலும் இயலாதவனாக்கி விடக்கூடிய பிரச்சனைகள் வந்து விடுகின்றன. இப்போது என்ன செய்வது என்று அவனுக்கு தெரியாமல் போய் விடுகிறது. அந்த வேளையில் துஆவின் மூலமாகவே அந்தப் பிரச்சனை விலக முடியும்.

எண்ணற்ற இடங்களில் பல்வேறு முறைகளில் பல்வேறு அறிவிப்பாளர் மூலம் அன்னார் அதன் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்கள் அதனை உணர்ந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்களது அருகாமையின் காரணமாக அன்னாரது துஆவின் மீது அவர்களுக்கு எவ்வளவு உறுதி இருந்தது? எவ்வளவு ஈமான் இருந்தது? என்றால், அந்நியர்களிடம் கூட அதன் தாக்கம் இருந்தது. அஹ்மதிகளுடன் தொடர்பு வைத்திருந்த பிற மதத்தவர்கள் கூட அன்னாரது துஆக்கள் அதிக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை அறிந்திருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சமூகத்தில் ஒரு சம்பவம் கூறப்பட்டது. அதனைக் கேட்டு ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் சிரித்தார்கள். ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் உடைய சம்பவமாகும். ஒருமுறை அவர் மாஜிஸ்ட்ரேட்டிடம், நான் காதியான் செல்ல விரும்புகிறேன். எனக்கு விடுப்பு தாருங்கள் என்று கூறினார். அவர் விடுப்பு தர மறுத்து விட்டார். அதற்கு முன்ஷி சாஹிப், மிகவும் நல்லது. நான் உங்களுக்கு எதிரான துஆவில் ஈடுபடப் போகிறேன். இறுதியில் அந்த மாஜிஸ்டிரேட்டிற்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டது என்றால் அவர் மிகவும் பயந்து போய் விட்டார். இதற்குப் பிறகு அவருக்கு எத்தகைய தாக்கம் ஏற்பட்டது என்றால் வாரத்தின் ஓய்வு நாட்கள் வரும் போது நீதிமன்ற ஊழியர்களிடம், இன்று சற்று சீக்கிரமாக வேலையை முடித்து விட வேண்டும் என்று கூறுவார். இவ்வாறு மாஜிஸ்டிரேட் அவர் காதியான் செல்ல விருப்பம் தெரிவிக்கும் போதெல்லாம் அவருக்கு விடுப்பு தந்து அனுப்பி விடுவார். அவரது துஆவிற்கு அவ்வளவு பயந்தார். இவ்வாறு இம்மக்கள் தமது மாண்பு மற்றும் துஆவின் தாக்கத்தை அந்நியர்களிடமும் ஏற்படுத்தி இருந்தார்கள். இதனையே இன்று நாமும் நம்முன் வைக்க வேண்டும். அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரிக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக இன்னும் சில விஷயங்களைக் கூறுவேன். அவை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியதாகும். அவை நமது ஆன்மீக முன்னேற்றம் மற்றும் தர்பிய்யத்திற்கு மிகவும் அவசியமாகும்.

உலகில் பல்வேறு இயல்புகளைக் கொண்ட மக்கள் இருக்கிறார்கள். சிலரது இயல்பு மிகவும் வேகமாக இருக்கிறது. சிலரது இயல்பு மிதமாக இருக்கிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த உணர்வுகளின் வித்தியாசம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் சம்பந்தப்பட்ட ஓர் உலகியல் உதாரணம் தருகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஓர் ஊரில் அந்த ஊர்க்காரர்கள், எள் மிகவும் சூடு; ஒரு கால் கிலோ எள்ளை ஒருவராலும் உண்ண முடியாது. அப்படி உண்டு விட்டால் அவருக்கு உடனே நோய் பற்றி விடும் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சுக்கிடையில் ஒருவர், யாராவது ஒருவர் இவ்வளவு எள்ளை சாப்பிட்டு விட்டால் நான் அவருக்கு ஐந்து ரூபாய் பரிசு கொடுப்பேன் என்றார். அவ்வழியாக ஒரு விவசாயி கடந்து கொண்டிருந்தார். அவர் அதன் காம்போடு சேர்த்து சாப்பிட வேண்டுமா? அல்லது எள்ளை மட்டுமா? என்று அவர் கேட்டார். இந்த இருவரது உணர்விலும் எவ்வளவு இயலாத காரியம் என்று கருதுபவராக இருந்தார். இன்னொருவரோ காம்போடு சேர்த்து சாப்பிடவும் தயாராக இருந்தார்.

ஆக, உலகிலுள்ள இந்த எல்லா வித்தியாசங்களும் உணர்விலுள்ள வித்தியாசங்கள் தான். இதுவே ஆன்மீக உலகிலும் நடைபெறும் சட்டமாக இருக்கின்றது. சிலருக்கு தொழுகையின் மீது அதிக தாக்கமும் சிலருக்கு குறைவான தாக்கமும் ஏற்படுகிறது. சிலர் தொழுகிறார்கள். வெளிப்படையாகக் குனிந்து நிமிர்கிறார்கள். தொழுது விட்டு போய் விடுகின்றனர். எந்தத் தாக்கமும் அந்தத் தொழுகையால் ஏற்படுவதில்லை. ஆன்மீகப் புலன்களின் நிரூபணம் அந்த ஆன்மீக உணர்வு அதிகமாக இருப்பவர்களுக்கே ஏற்படுகிறது. அவர்களே இறைவணக்கம் செய்பவர்களாகவும் இறைவணக்கத்தின் தாக்கத்தை அதிகமாகப் பெறுபவர்களாகவும் இருக்கின்றனர். எனவே ஜமாஅத்தில் அத்தகைய மக்கள் அதிகமாக இருக்க வேண்டும். ஆன்மீக உணர்வை அதிகமாக ஏற்கத்தக்க புலனுடையவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். பிறகு உலகிற்கு உண்மையான தொழுகை என்றால்

என்ன? உண்மையான வணக்கம் என்றால் என்ன? அதற்காக எத்தகைய உணர்வை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது? என்று உலகிற்கு தெரிவிப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை கூறினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மவ்லவி கான் மலிக் சாஹிப் என்ற மார்ஒக்க அறிஞர் ஒருவர் இருந்தார். அவர் இலக்கண அறிவு மிக்கவராக இருந்தார். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதம் பற்றி எங்கோ கேள்விப்பட்டு விட்டு காதியான் வந்தார். விஷயத்தைக் கேட்டு விட்டு ஈமானும் கொண்டார். திரும்பிச் செல்லும்போது மவ்லவி குலாம் அஹ்மது சாஹிபை போய் பார்த்து விட்டு செல்ல வேண்டும் என்று விரும்பினார். மவ்லவி குலாம் அஹ்மது சாஹிப் ஷாஹி மஸ்ஜிதில் தர்ஸ் கொடுத்து வந்தார். அவர் மவ்லவி முஹம்மது கான் மலிக் சாஹிப் உடைய மாணவராவார். மவ்லவி குலாம் அஹ்மது சாஹிப், கான் மலிக் சாஹிபிடம், தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டார். காதியானிலிருந்து வருகிறேன் என்றார். அவர் வியந்து போய் காதியானிலிருந்தா? என்றார். அவர், ஆம்! காதியானிலிருந்து தான் வருகிறேன். ஏன் என்று அவர் கேட்க, நான் மிர்ஸா சாஹிபிடம் சீடராகவதற்காகச் சென்றேன் என்றார். அவர் கேட்டார். நீங்கள் எவ்வளவு பெரிய ஆலிம்? அவரிடம் என்ன சிறப்பைக் கண்டீர்கள்? அவரிடம் முரீதாவதற்காக போய் விட்டீர்கள்? மவ்லவி கான் மலிக் சாஹிப் கூறினார். நீ உன் வேலையைப் பார். உனக்கு கால யகூலூ கூட நன்றாகத் தெரியாது என்று பஞ்சாபியில் கூறினார். ஆக அத்தகைய நல்லியல்பு கொண்ட மக்களும் இருக்கிறார்கள். அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் இணைந்தனர். தமது அறிவைப் பற்றி அவர்களுக்கு எந்தப் பெருமையும் இல்லை.

அதுபோன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது ஒரு சம்பவம். கூறுகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் ஓர் அரேபியர் வந்தார். அவருக்கு தப்லீக் செய்வதற்காக சிலரை நியமித்தார்கள். பல நாட்கள் உரையாடல் நடந்தது. ஆனால் எந்தத் தாக்கமும் அவரிடம் ஏற்படவில்லை. இறுதியில் தப்லீக் செய்த நண்பர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார்கள். இவர் மிகவும் ஆர்வமிக்க மனிதராக இருக்கிறார். வெறுமனே கேள்வி கேட்பவர்கள் போன்று இல்லை. இவரிடம் உண்மையின் வேட்கை இருப்பது தெரிய வருகிறது என்று கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்தார்கள். அவருக்கு நேர்வழி கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இறைவனது வல்லமையால் அதே இரவில் நடந்த ஏதோ ஒரு விஷயத்தால் எத்தகைய தாக்கம் ஏற்பட்டது என்றால் காலையில் அவர் பைஅத் செய்து விட்டுச் சென்று விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னிடம் கூறப்பட்டது. ஹஜ் சமயத்தில் நிறைய குழுவினரிடம் தப்லீக் செய்துள்ளார். ஒரு குழுவினர் அடித்தடித்து மயக்கமடையச் செய்தனர். பிறகு உணர்வு வந்ததும் எழுந்து வேறொரு குழுவிடம் சென்று தப்லீக் செய்வார்கள். ஆக, விஷயம் என்னவென்றால் நெஞ்சங்களைத் திறக்கும் போதுதான் திறக்கின்றன. எந்த அளவுக்கு முன்மாதிரியான உணர்வு உருவாகிறது என்றால் வேறெதனையும் பொருட்படுத்துவதில்லை.

அதுபோன்று அன்னார் இன்னொரு சம்பவத்தைக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழந்தைகளுடன் எவ்வாறு தொடர்பு வைத்திருந்தார்கள்? எவ்வாறு அவர்களின் தர்பிய்யத்தில் கவனம் செலுத்தினார்கள்? அதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சரியான தர்பிய்யத்தின் நடைமுறை என்னவென்றால் அவர்களுக்கு நல்ல விளையாட்டைக் கற்றுத் தர வேண்டும். நல்ல விளையாட்டின் மூலம் தர்பிய்யத் ஏற்படும். முதலில் குழந்தைகள் மிகவும் சிறுவர்களாக இருக்கும் போது கதைகளின் மூலமாக அவர்களுக்கு தர்பிய்யத் ஏற்படுகிறது. பெரியவர்களுக்கு கதையில்லாத போதனை செய்யலாம். சிறு வயதில் ஆர்வத்தை நிலைநாட்ட கதைகள் அவசியமாகும். அந்தக் கதைகள் முழுவதும் பொய்யானவையாகவே இருக்க வேண்டும் என்பதன்று. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கதைகள் சொல்வார்கள். சில வேளைகளில் ஹஸ்ரத் யூசுஃப் வரலாறு சிலவேளை ஹஸ்ரத் நூஹ் வரலாறு சில வேளை ஹஸ்ரத் மூஸா உடைய சம்பவங்களைக் கூறுவார்கள். நம்மைப் பொருத்தவரையில் அவை கதைகளாக இருந்தாலும் அவை அனைத்தும் உண்மை சம்பவங்களாக இருந்தன.

சிறு வயதில் கல்வி கற்றுத் தர மிகச் சிறந்த வழி கதைகளாகும். சில கதைகள் அர்த்தமற்றவையாகவும் வீணானவையாகவும் இருக்கின்றன என்றாலும் பயன் தரத்தக்க, பாடம் தரத்தக்க, நல்லொழுக்கத்தைக் கற்றுத் தரும் கதைகளும் உள்ளன. குழந்தைகளின் வயது சிறியதாக இருக்கும்போது அதன் மூலம் அவர்களுக்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. சிறிது வளரும் போது அவர்களின் கல்வி மற்றும் பயிற்சிக்கு சிறந்த வழிமுறை விளையாட்டுக்கள் ஆகும்.

சில பெற்றோர்கள் வருகிறார்கள். இவன் அதிகமாக விளையாடுகிறான் என்கின்றனர். டி.வி –யின் விளையாட்டு அல்ல. வெளியில் சென்று விளையாடுகின்றான் என்றால் விளையாட விட்டு விட வேண்டும். புத்தகங்கள் மூலம் தரப்படுகின்ற அறிவுகள் போதனைகள் விளையாட்டுகள் மூலம் செயல் அளவில் தரப்படுகின்றன. கதைகள் சொல்ல வேண்டிய காலம் அதற்கும் கீழுள்ள குழந்தைகளுக்குரியதாகும்.

தந்தையர்களும் குழந்தைகளுக்காக சிறிது நேரம் தர வேண்டும். தாயும் தந்தையும் சேர்ந்து குழந்தைகளின் தர்பிய்த்தில் அழுத்தம் கொடுங்கள். நட்புடன் தொடர்பு கொள்ளுங்கள். சரியான தர்பிய்யத் வழங்குங்கள். அவர்களை உங்களோடு இணைத்துக் கொள்ளுங்கள். இதனால் நிச்சயமாக தாய் தந்தையர் புகார் கூறுகின்ற பல தர்பிய்யத் பிரச்சனைகள் தீர்ந்து விடுகின்றன. இக்காலத்தில் பெற்றோர் இதிலிருந்து தப்பிப்பதற்காக அதாவது குழந்தைகள் சப்தமிடாமல் இருப்பதற்காக அவர்களது கைகளில் I Pad அல்லது கம்பியூட்டரை தந்து விடுகிறார்கள் அல்லது டி.வி –யின் முன் அமர்த்தி விடுகிறார்கள். அதில் நல்ல கதைகள் வந்தால் சரி. ஆனால் சில நேரங்களில் அவர்களது நேரத்தை வீணாக்குகிறது. அதுபோன்று குழந்தைகளை

அவ்வாறு உட்கார வைக்கவும் கூடாது. ஏனென்றால் நீண்ட நேரம் அதில் அமர்ந்திருந்தால் பார்வையின் மீது அதன் தாக்கம் ஏற்படுகிறது. இரண்டாவது, இரண்டு வயதை விட குறைந்த குழந்தைகளுக்கு அதனால் அவர்களது சிந்தனையிலும் மாற்றம் ஏற்படுகிறது. மருத்துவர்கள் கூறுகின்றனர். அவர்களது சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டு தீய தாக்கம் ஏற்படுகிறது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களுக்கு கதைகள் சொல்வார்கள். கதை சொல்வதன் அப்போதைய பயனும் கிடைத்தது. அன்னார் கதை சொல்லா விட்டால் நாங்கள் கூச்சலிடுவோம். அவர்களுக்கும் வேலை செய்ய இயலாது. எனவே, கதை சொல்லி அமைதியாக இருக்க வைப்பதும் அவசியமாகும். இரவில் அவர்களின் மகிழ்ச்சியை நிலைநிறுத்துவதற்காக அன்னார் கதைகள் சொல்வார்கள். அதன் மூலம் நாங்கள் தூங்குவதற்காகவும் தாம் பணி செய்வதற்காகவும் அவ்வாறு செய்வார்கள்.

நட்பு என்பது அழிவுக்குக் காரணமாக இருக்கக் கூடாது என்பதை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சம்பவம் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஒரு பழைய வரலாறு ஒரு மனிதருக்கு கரடியுடன் தொடர்பிருந்தது. அவர் அதனை பராமரித்து வந்தார். அது ஒரு சிக்கலான நேரத்தில் அவர் மீது கருணை காட்டியிருந்தது. அதனால் அவர் அதன் அருகே அமர்ந்திருந்தார். இது ஒரு கதையாக இருப்பினும் ஓர் உண்மை தத்துவத்தைக் கூறுவதற்காகக் கூறப்பட்டுள்ளது. நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து ஒரு வரலாற்றை அறிவிக்கிறேன். அதுவும் இதே பொருளில் தான். ஓர் உண்மை தத்துவத்தை விளக்கும் நோக்கில் கூறப்பட்ட கதையாகும். அதாவது ஒரு போதனை செய்யும் நோக்கத்தில் கூறப்பட்ட கதை.

ஒரு கரடி ஒரு மனிதனுக்கு நண்பனாக இருந்தது. அதனிடம் அக்கரடி வந்தது. அவனது தாயார் நோயுற்றிருந்தார். அவன் தனது தயாருக்காக விசிறியை வீசிக் கொண்டிருந்தான். ஈக்களை விரட்டிக் கொண்டிருந்தார். ஏதோ ஒரு வேலைக்காக தற்செயலாக வெளியே செல்ல வேண்டியது ஏற்பட்டது. அம்மனிதர் அக்கரடியிடம் இந்த ஈக்களை விட்டு நான் வெளியில் சென்று வருகிறேன் என்று சைகை செய்தார். கரடியும் மிகவும் பொறுப்பாக அந்த வேலையைச் செய்யத் தொடங்கியது. ஆனால் மனிதன் மற்றும் விலங்குக்கிடையில் கையில் ஒரு வித்தியாசம் உள்ளது. மனிதன் கையை அசைப்பது போன்று எளிதாக ஒரு விலங்கு கையை அசைக்க முடியாது. அது ஈயை விரட்டியது. பிறகு வந்து அமர்ந்தது. பிறகு விரட்டியது. பிறகு வந்து அமர்ந்தது. பிறகு ஈயை மீண்டும் மீண்டும் வந்து விரட்டுவதால் நண்பனின் தாயாருக்கு தொல்லையாக இருக்கும் என்று நினைத்தது. இதற்கு நிவாரணமாக ஒரு பெரிய கல்லை எடுத்து ஈயைக் கொல்வதற்காக வேகமாக அடித்தது. ஈ செத்து விட்டது தான். அத்துடன் தாயும் நசுக்கப்பட்டாள். இது ஓர் உதாரணமாகும்.

இதன் பொருள் அறிவற்றவர்களுடன் நட்பு பாராட்டினால் அவர்களுக்கு நட்பு காட்டக்கூடிய வழிமுறை தெரியாமல் உள்ளனர். சில வேளையில் நல்லது செய்வதாக நினைப்பார்கள். அது உண்மையில் அழிவாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது எனது நினைவில் உள்ளது. ஒரு கரடி இருந்தது. அதற்கு ஒரு மனிதருடன் நட்பு இருந்தது. அவரது மனைவி அவரை எப்போதும் ஏசிக் கொண்டேயிருந்தாள். நீயும் ஒரு மனிதனா? கரடியோடு நட்பு வைத்துள்ளாய் என்று ஏசினாள். ஒருநாள் அவளது பேச்சு எவ்வளவு சப்தமாக இருந்தது என்றால் அதனை கரடியும் கேட்டு விட்டது. அந்தக் கரடி ஒரு வாளை எடுத்து நண்பரிடம் கொடுத்து இதனைக் கொண்டு என் தலையில் வெட்டு என்றது.

இந்த உரையாடலைக் கேட்டு ஆச்சர்யப்பட வேண்டாம். இது கதைதான். சில மனிதர்கள் கரடியின் வடிவத்திலும் சிலர் மனித வடிவத்திலும் இருக்கிறார்கள் என்று கூறுவதற்காக இது சொல்லப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ஓர் இயல்பு இருக்கிறது. மனிதரிலும் சிலர் கரடியாக இருக்கின்றனர். சிலர், மனிதர் என்று அழைக்கப்பட்டாலும் பிற மிருகங்கள் போன்று இருக்கின்றனர். அந்தக் கரடி அவனிடம் என் தலையில் வெட்டு என்றது. இறுதியில் அம்மனிதர் வாளை எடுத்து அதன் தலையில் வெட்டினான். அது காட்டுக்குள் ஓடிப் போய் விட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு மீண்டும் தனது நண்பனிடம் வந்து, என் தலையில் காயத்தின் ஏதாவது அடையாளமாவது இருக்கிறதா? பார்! என்றது. அவன் பார்த்தான். காயத்தின் எந்த அடையாளயமும் இல்லை. அப்போது கரடி சொன்னது: சில காடுகளில் சில மூலிமைகள் இருக்கின்றன. அதனைக் கொண்டு சிகிச்சை செய்தேன். காயம் ஆறி விட்டது. ஆனால் **உனது மனைவி எனக்கு எதிராகப் பேசினாளே அதன் காயம் இன்றும் என் உள்ளத்தில் உள்ளது. சில நேரங்களில் வாளின் காயத்தை விட நாவினால் ஏற்படும் காயம் மிகக் கடுமையானதாகி விடுகிறது. அந்த வாள் எத்தகைய காயத்தை ஏற்படுத்துகிறது என்றால் மறக்கவே முடிவதில்லை.** சமூகத்தின் அமைதிக்கு நிம்மதிக்கு ஒவ்வொருவரும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். ஒருவர் மற்றவரின் உணர்வை கவனத்தில் கொள்ள வேண்டும். காரணமில்லாமல் நாவின் அம்புகளை விடக்கூடாது. அதனால் அவர்களது உள்ளத்தில் அந்தக் காயம் எப்போதும் இருக்கும். இது எத்தகைய பாடம் என்றால் இதனை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு தமது ஈமானை பாதுகாப்பது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். சில வேளைகளில் சின்னச்சின்ன வார்த்தைகள் ஈமானை வீணாக்கி விடுகின்றன. சில வேளைகளில் இறைவனது விருப்பத்திற்கு எதிராக பேசினால் ஈமான் வீணாகி விடுகிறது. எனவே நாம் எப்போதும் நம்மை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும்.

இறை தியானம் சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சான்று காட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், மனிதனின் கை வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் உள்ளம் இறைவனை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று ஒரு பெரியவரின் கூற்றைக் கூறுவார்கள். அதுபோன்று ஒரு பெரியவரின் சம்பவம் பிரபலமானது. அவரிடம் ஒருவர், நான் எத்தனை முறை அல்லாஹ்வை திக்ர் செய்ய

வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர், அன்புக்குரியவரின் பெயரை சொல்வதற்கு எண்ணிக் கொண்டா சொல்ல வேண்டும்? திக்ர் என்பது எண்ணாமல் கூறுவதாகும். ஆனால் குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயிப்பதில் ஒரு சிறப்பு என்னவென்றால், மனிதன் தனது பிரியத்திற்குரியவனை திக்ர் செய்வதற்காக தனது பணிகளிலிருந்து முற்றிலும் தனித்து விடுகிறான். இந்த இரு நிலைமைகளும் அவசியமாகும். நிர்ணயிக்கப்பட்ட வகையிலும் கூட திக்ர் செய்வதும் சரியான முறையேயாகும்.

எவ்வாறிருப்பினும், பல்வேறு பணிகளில் மூழ்கியுள்ளவர்கள் இதற்காக சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். மேலும் நேரம் நிர்ணயிக்காமல் உட்காரும் போதும் எழும் போதும் அல்லாஹ்வை நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அருள் மற்றும் உதவியை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டும். மார்க்க விஷயங்களை சிந்தித்துக் கேட்பதும் அதனை நினைவில் வைக்க முயற்சி செய்வதும் பிறகு அதனை செயல்படுத்துவதும் ஓர் அஹ்மதியின் இலக்காக இருக்க வேண்டும். குத்பா கேட்பது, சொற்பொழிவுகளைக் கேட்பது, கூட்டங்களில் கலந்து கொள்வது, அவ்வப்போது ஒரு நூலைப் படிப்பது அதிலிருந்து தற்காலிகமாக தாக்கத்தைப் பெறுவது, பிறகு அதனை நினைவில் வைக்காமல் இருப்பது அல்லது செயல்படாமல் இருப்பது ஆகியவை மனிதனுக்கு எந்தப் பலனையும் தராது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிப்பதும் அதிலிருந்து பயன் அடைவதும் கூட நமது கடமைகளில் உள்ளவையாகும். நினைவில் கொள்ளுங்கள். ரசிப்பதற்காக மட்டும் அதனை செய்யாதீர்கள். மாறாக பயன் பெறும் எண்ணத்தில் அந்த விஷயங்களில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் ரசனை பெறுவதற்காக முழு குர்ஆனையும் படித்தாலும் உங்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது. ஆனால் நீங்கள் அல்லாஹ் உடைய பண்புகளை ஆய்வு செய்தவாறு அதன் மீது அன்பின் எழுச்சியால் ஒருமுறை சுப்ஹானல்லாஹ் கூறினாலும் அது உங்களை எங்கிருந்து எங்கோ கொண்டு சென்று விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை சபையில், சில வேளை நாம் தஸ்ஃபீஹ் செய்யும் போது ஒரு தஸ்ஃபீஹினால் எங்கிருந்து எங்கோ சென்று விடுகிறோம் என்று கூறினார்கள்.

அப்போது நான் அந்த சபையில் இருக்கவில்லை. ஓர் இளைஞர் இதனைக் கேட்டு விட்டு அங்கிருந்து எழுந்து வந்தார். இன்று ஹஸ்ரத் சாஹிப் என்ன கூறினார்கள் தெரியுமா? அவர் அனுபவமுள்ளவராக இருக்கவில்லை. நான் அப்போது கூட அதில் அனுபவம் உள்ளவனாக இருந்தேன். நான் என் சொந்த அனுபவத்தில் அறிந்திரந்தேன். நான் சுப்ஹானல்லாஹ் கூறும் போது நான் முதலில் வேறாக இருந்தேன். இப்போது வேறு ஒருவனாகி விட்டேன் என்ற உணர்வு ஏற்பட்டது. ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களும் இதனை மிகவும் அழகாக கூறியுள்ளார்கள். ஆனால் அப்போது நான் புகாரி கூட படித்ததில்லை. எனது அனுபவம் சரியாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரு வார்த்தைகள் ரஹ்மானுக்கு மிகவும் பிரியமானவை. நாவுக்கு மிகவும் இலேசானது. மனிதன் தனது நாவினால் மிகவும் எளிதாக அதனை கூற முடியும். எந்த சுமையையும் அதனால் உணர மாட்டான். ஆனால் கியாமத் நாளில் எடை போடும் வேளை வரும்போது அதுவே மிகவும் கனமானதாகவும் நிரூபணமாகும். அந்த வாக்கியத்தின் தட்டு மிகவும் தாழ்ந்து விடும். அந்த வார்த்தைகள் இவையாகும். சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு இந்தக் கலிமாவை ஓதும் பழக்கம் அதிகமாக இருந்தது. நான் பார்த்துள்ளேன். ஒருமுறை இந்தக் கலிமாவை சொன்னதும் ரூஹ் எழுந்து எங்கிருந்து எங்கோ போய் விடுகிறது.

அசல் விஷயம், நாம் மிகவும் கவனத்துடன் அல்லாஹ்வின் கட்டளைகளைச் சிந்தித்தவாறு செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதுவே அதன் உண்மை நிலையாகும். சில வேளைகளில் உள்ளத்திலிருந்து தஸ்ஃபீஹ் தஹ்மீது ஓதும் போது அது தனது தாக்கத்தைக் காட்டுவதற்காக உணர முடிகிறது. அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! நமக்குள் செயல் ஆற்றலை உருவாக்குவானாக! அல்லாஹ்வின் திருப்தி பெறுபவராக்குவானாக! நமது ரூஹை உயர்வின் பக்கம் எடுத்துக் செல்கிற தஸ்ஃபீஹ் வ தஹ்மீது செய்பவர்களாவோமாக! மேலும் நமக்கு இறைவனது நெருக்கம் கிடைக்கட்டுமாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 29.01.2016
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516